1995 ஏப்ரல் 5]

அடிப்படையிலேதான் நான் ஏற்கெனவே தெரிவித்தேன். இந்தச் சாலை நெடுஞ்சாலைத்துறையால் பராமரிக்கப்படுகின்ற இதர மாவட்ட சாலை என்பதையும் நான் அறிவேன். ஆகவே இங்கே பாலம் கட்ட வேண்டியது அவசியம் என்று அரசு கருதுகிறது. இருந்தாலும் ஒரு பெரும் தொகை வேண்டியிருக்கிற காரணத்தால்தான் நிதி ஒதுக்கீடு செய்ய வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் தெரிவித்தேன். வேண்டுமானால் அடுத்த நிதி ஆண்டு இது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 227, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

227—

நகப்பாளையத்தில் குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டுதல்

33877*—திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், நகப்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்பில் உள்ள 250 வீடுகளை, குடிசை மாற்று வாரியம் ஏற்று அடுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், இந்த மூன்று கருத்துக்களையும் முத்தாய்ப்பாக கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பாராட்டக் கூடிய தலைவியாக, பார் புகழும் உத்தம தலைவியாக, பீடு நடை போட்டுக் கொண்டிருக்கிற புண்ணியத் தலைவியின் பொற்கால ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னாலும் கூட

[1995 ஏப்ரல் 5

கொடுமுடியைப் பொறுத்த வரையில் அதைத் தனி தாலுக்காவாக அறிவிக்கக் கூடிய அளவில் கொள்கை அளவில் ஏற்று அதை தனி தாலுக்காவாக பிரிப்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறபடியாலும், கொடுமுடியைச் சுற்றிலும் 9 பேரூராட்சிகள் இருக்கிற காரணத்தாலும். கொடுமுடியில் கிட்டத்தட்ட 1½ லட்சம் பொதுமக்கள் வசிக்கின்ற காரணத்தாலும், அந்த ஒன்றியத்திலே இது பெரிய பேரூராட்சியாக இருக்கிற காரணத்தாலும், ஈரோடு தாலுக்காவுக்கு உட்பட்டிருக்கிற காரணத்தாலும், வீட்டு வசதி வாரியத்தினுடைய மூலமாக எந்த வீடுகளும் கட்டப்படாத சூழ்நிலையில், இந்த ஆதிதிராவிட அரிசன மக்களுடைய காலனியைப் பொறுத்தவரையில் 300 குடும்பங்களுக்கு மேலாக ஒரே இடத்தில் இருக்கிற படியாலும், போக்குவரத்து வசதிகள் மற்ற எல்லா வசதிகளும் கொண்ட முக்கியமான இடத்தில் அந்தக் காலனி அமைந்திருக்கிற காரணத்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வருகிற நிதி ஆண்டிலாவது சிறப்பு திட்டத்தின் கீழ், குடிசை மாற்று வாரியத்தின் கீழ் அந்த வீடுகளை எடுத்து அடுக்கு மாடிக் கட்டிடங்களாக கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினுடைய பணிகள் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் தேர்வு நிலை பேரூராட்சிகள் ஆகிய பகுதிகளுக்கு மட்டுமே விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம் நகப்பாளையம் கிராமத்திற்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் இன்னும் விரிவுபடுத்தப்படவில்லை. அப்படி எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, கொடுமுடியை பொறுத்தவரை வளர்ச்சி அடைந்து வரக் கூடிய ஒரு பேரூராட்சியாக, தேர்வுநிலை பேரூராட்சியாக இருந்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வத்தினுடைய ஆட்சியிலே 1995–96 ஆம் ஆண்டிலே கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய் செலவிலே குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பிலே 4,000 வீடுகளை ஆதிதிராவிட மக்களுக்கும் அதே போல நடைபாதைவாசிகளுக்கு 2,000 வீடுகளையும் சாலைப்புரம், இரயில்பாதை, பொது அலுவலகங்கள்

1995 ஏப்ரல் 5]

இருக்கிற இடத்திலே இருக்க இடம் இல்லாமல் குடியிருந்துக்கொண்டிருக்கிற மக்களுக்கு இருக்க இடத்தை கட்டித் தருவதற்காக கிட்டத்தட்ட உலக வங்கியின் மூலம் 100 கோடி ரூபாயும் கேட்டு கிழியாத ஆடை, ஒழுகாத வீடு, ஆறாத சோரை இந்த அவனியே கவனிக்க பவனி வந்து அத்தனை பேருக்கும் வாரி வழங்கிக் கொண்டிருக்கின்ற நடமாடும் பேசும் தெய்வத்தினுடைய ஆட்சியிலே வளர்ந்து வரும் நகரமாக விரைவிலே தாலுக்காவினுடைய மையமாக விளங்கக் கூடிய கொடுமுடியிலே வருகின்ற சிறப்புத் திட்டத்தின் கீழ் வருகின்ற நிதியாண்டிலேயாவது உலக வங்கியிலேயிருந்து பெறக்கூடிய 100 கோடி ரூபாயிலே இந்த கருணை தெய்வத்தின் ஆட்சியிலே ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி 350 குடியிருப்பு அடுக்ககங்களையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டித்தர ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு நிலை பேரூராட்சிகளை பொருத்தவரை குடிசை மாற்று வாரியத்தினுடைய பணிகள் விரிவுபடுத்தப்பட்டு இருக்கின்றன. குடிசைமாற்று வாரியத்தினுடைய நிதிநிலையை கருத்திலே கொண்டு அங்கு பணிகள் தொடர்ந்து தொடங்கப்படும். அதேபோல அங்கு அடுக்கு மாடி வீடுகள் போன்றவை எல்லாம் குடிசை மாற்று வாரியத்தினுடைய நிதிநிலையைக் கருத்திலே கொண்டு அமைத்துத் தரப்படும். நகப்பாளையம் கிராமத்தை பொருத்தவரைக்கும் அப்படி எந்தவிதமான பரிசீலனையும் அரசில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 228, டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

228—

பெண்ணாகரம் தொகுதியில் நீர்ப்பாசனத் திட்டங்கள்

33026*—டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக பெண்ணாகரம் தொகுதியில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றும் பணி மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?